St. Joseph's Journal of Humanities and Science (Volume 3 Issue 1 January 2016) 62-65

St. Joseph's Journal of Humanities and Science

ISSN: 2347-5331

http://sjctnc.edu.in/6107-2/




# தமிழ் போற்றும் தமிழக கிறித்துவர்கள்

- திருமதி. ஜெ.தேவசேனா *

## முன்னுரை

இலக்கிய வரலாற்று நூல்களில் கூட சைவமும் தமிழும் கிருத்துவமும் தமிழும் இஸ்லாமும் தமிழும் என்று பிரித்து வகைப்படுத்தியுள்ளது. கி.பி 6 முதல் 8 ஆம் நூற்றாண்டு வரை சைவம் தழைத்தோங்கி இருந்தது என்றால் கி.பி16ம் நூற்றாண்டில் கிறித்துவம் மிகப்பெரிய பங்களிப்பை தமிழுக்கு ஆற்றியுள்ளது. தமிழகம் அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பே கிறித்துவர்கள் தாங்கள் பள்ளிக்கூடங்களை நிறுவி அப்பணியைச் செய்ய துவங்கிவிட்டனர். தமிழ்நாட்டில் நவீனக்கல்வி முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதை சமசீர்நிலைக்கு அடித்தள மக்களிடம் கொண்டு சேர்த்ததில் கிறித்துவர்களுக்குப் பெரும் பங்குண்டு. தமிழ்நாட்டில் சமயத்தையும், கல்வியையும் இணைத்துச் செயல்படத் தொடங்கினர். இலக்கியத்துறைக்கு அவர்களின் பணி இன்றும் நிலைத்து நிற்கிறது. அதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## பி.எல். சாமி

சங்க இலக்கிய அறிவியலை வெளிக்கொணர்ந்த பி.எல்.சாமி தமிழகத்தைச் சேர்ந்தவர். இவரது பெற்றோர் திருச்சபைச் சரித்திரத்தை முதன் முதலில் தமிழில் எழுதிய கோவைப்புலவர் பெரியநாயனம், தாயார் மரிய மதலேன் ஆவார். இவரது இயற்பெயர் பி.லூர்துசாமி என்பதாகும். தற்பொழுதும் இருக்கின்ற கடலூர் மஞ்சக்குப்பம் தூயவளனார் பள்ளியில் 10-ம் வகுப்பு வரை படித்தவர் என்பதில் இப்பள்ளிக்குப் பெருமை சேர்கிறது.

கிறித்துவர்களின் தமிழ்த்தொண்டு என்றாலே ஜி.யு.போப், வீரமாமுனிவர், சீகன்பால்கு ஐயர் இவர்கள் மட்டுமே நம்நினைவில் கொண்டு வரப்படுகின்றனர். இந்த நூற்றாண்டில் தமிழகத்தில் பிறந்து தமிழ் இலக்கியங்களில் சிறந்த ஆராய்ச்சியும், அவர்கள் படைத்த நூல்கள் ஆராய்ச்சி ஆளர்களுக்கு உறுதுணை நூலாக விளங்குகின்ற தமிழ் மண்ணின் கிறித்துவ சமயம் சார்ந்த சான்றோர் பெருமக்களின் மகிமையை தொகுக்கப்பட்டுள்ளது.

முனைவர்.வ.ஐ.சுப்பிரமணியம் அவர்கள், சங்க இலக்கியம் பயிலும் மாணவர்கள் L.சாமியின் நூலால் பெறுகின்ற பயன் சிறிதன்று, பழம் பாடல்களுக்குப் பொருள் விளக்கம் தேட நினைக்கின்றவர்களுக்கும், செடி செய்திகளை அறுதியிட நினைக்கின்றவர்களுக்கும் இந்நூலால் கிடைக்கும் பயன் பெரிது என்கிறார்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் 125க்கும் மேற்பட்ட மரம், செடி, கொடிகள் பற்றிய ஆய்வில் பல அரிய மரங்கள், செடி, கொடிகள் அடையானம் கண்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவர் கிறித்துவராக

* உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.

கைப்பேசி: 9600530463, மின்னஞ்சல்: devachandran67@gmail.com

இருப்பினும், ஆய்வு என்று வரும்போது சமநோக்கு படிநிலை கொண்டு பார்த்துள்ளார் என்பதை திருமுருகாற்றுப் படையில் கூறப்படும் வேலன் வழிபாடும், சங்க கால வேலன் வழிபாடும் ஒன்று என்றும், சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள 58 பறவைகளில் 22 பறவைகள் நீர் பறவைகள் என்றும், புறாவில் 5 வகையும் வல்லூறுகளில் 3 வகையும், காக்கையில் 2 வகையும், ஆந்தையில் 6 வகையும், கழுகில் 2 வகையும், பிணம் தின்னிக் கழுகினத்தில் 3 வகையும் உள்ளன என்றும், "கவரிமா" என்பது குளிர்மிகுந்த இமயமலைப் பகுதிகளில் வாழும் "யாக்" எனப்படும் ஒருவகை எருது என்றும், நடனசபாபதி கோயிலுக்கு ஆதியில் "பொது" என்றும் பின்னாளில் "சபை" என்றும் "சிற்பொது" என்பது நாளடைவில் "சிற்றம்பலம்" என மாற்றம் அடைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சங்கப் புலவர்கள் சிறந்த இயற்கை ஆராய்ச்சியாளர்கள் என்பதையும், சங்க கால தமிழர்கள் அறிவியலைத் துறைதோறும் பகுத்துணர்ந்தவர்கள் என்பதையும், விலங்கியல், தாவரவியல் அறிவுள்ள தமிழ்நூல்களின் காலத்தை அறிய உதவும் என்பதையும், தமிழ் இலக்கியத்தில் விளங்காத புதிர்களை, ஐயத்திற்கிடமான செய்திகளைத் தெளிவு படுத்தியும், தமிழிலக்கியத்தை அறிவியலாகவும், வரலாறாகவும் மாறுபட்ட முறையில் எழுதியும் இலக்கியம், அறிவியல், வரலாறு என தனித்தனியே ஆய்வு செய்து தொடர்பற்றுக் கிடந்த ஆய்வுப்போக்கையும், நோக்கையும் ஒருங்கிணைந்த ஆய்வாக மேற்கொண்டவர் பி.எல்.சாமி அவர்கள். தமிழியல் துறை சாராத ஒருவர் தமிழிலக்கியங்களைப் புதிய கண்ணோட்டத்தில் ஆய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது படைப்புகள் செந்தமிழ் செல்வியில் தொடர்ந்து வெளிவரத் தொடங்கி, பின்னர் அவை தொகுக்கப்பட்டு நூலாகவும் வெளிவிடப்பட்டன. 1967 தொடங்கி 2002 வரையிலான இடைப்பட்ட காலத்தில் பி.எல்.சாமி அவர்களால் எழுதப்பட்ட 18 நூல்கள் வெளிவந்துள்ளன.

அவை,

1. சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்
2. சங்க இலக்கியத்தில் விளங்கின விளக்கம்
3. தாய்தெய்வ வழிபாடு
4. சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்
5. சங்க நூல்களின் மீன்கள்
6. சங்க நூல்களின் மணிகள்
7. Common name and myths of the flora and fauna in Dravidian
8. சங்க இலக்கியத்தில் அறிவியல்
9. சங்க நூல்களில் விந்தைப்பூச்சி
10. சங்க இலக்கியத்தில் அறிவியற்கலை
11. இலக்கிய ஆய்வு
12. தமிழ் இலக்கியத்தில் நாட்டார் பண்பாடு
13. தமிழ்நாட்டில் சிந்து வெளி எழுத்தோவியம்
14. சங்க நூல்களில் முருகன்
15. சங்க நூல்களில் செடி கொடிகள்
16. சங்க நூல்களில் மரங்கள்
17. சங்க நூல்களில் உயிரனங்கள்
18. அறிஞர் பி.எல்.சாமியின் ஆய்வுக் கட்டுரைகள்

## மனையியல் வல்லுநர் டாக்டர் ராஜம்மாள் பி.தேவதாஸ் (1919-2002)

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காளிகுலத்தில் 07.04.1919 ஆம் நாள் ராஜம்மாள் பி.தேவதாஸ் அவர்கள் பிறந்தார்.

## ராஜம்மாள் கண்டெடுத்த ஊட்டச்சத்து

இவரது சேவைகளைக் கண்ட பல பல்கலைக்கழகங்கள் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டங்களை வழங்கியுள்ளன. அமெரிக்கா ஆர்கான் பல்கலைக்கழகம், அமெரிக்கா ஒகியோ பல்கலைக்கழகம், வேளாண் பல்கலைக்கழகம், கான்பூர் வடக்கு அயர்லாந்து உல்ட்டர் பல்கலைக்கழகம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவர் எழுதிய நூல்கள் 57 என்றாலும், தமிழில் பொதுமக்களுக்கும் எளிதில் புரியும் வண்ணம் சுவைபட எழுதியது 13 நூல்களாகும்.

1. மனையியல் மாண்பு
2. சத்துணவும் கல்வியும்
3. ஆண்டவன் அருள்
4. குடும்பக்கலை
5. குழந்தைப்பாடல்
6. மனையியல் கல்வி முறைகள்
7. உணவு
8. குடும்ப மலர்
9. மருத்துவக் களஞ்சியம் தொகுதி-1 உடல்நலம்
10. ஐயா அவர்கள் உருவாக்கிய அவிநாசிலிங்ம் பல்கலைக்கழகம்
11. வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளல்
12. தியாகச் செம்மல்
13. நமது உணவைப் பற்றிய உண்மைகள்

## உணவு இரகசியம்

அறிவியல் பாடத்தில் பட்டம் வாங்கி இருந்தாலும் ஆங்காங்கே உணவில் உள்ள ஊட்டச்சத்தை எடுத்துக் காட்டத்தவறவில்லை. எ.கா. "அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும்" இக்கூற்றால் அன்றிலிருந்து இன்று வரை இலக்கியத்தில் நாட்டங்கொண்டவர்களே முக்கியமாக தமிழ்வழி பயின்றவர்களே அறிவியலை எழுத முனைந்துள்ளனர் என்று கூறத்தோன்றுகிறது.

இவ்வாசிரியர் பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலம் அமைக்கவும் முனைந்துள்ளது தெரியவருகிறது. எ.கா.வைட்டமின் சியின் பெருமையை, அவசியத்தை எழுதும்போது, "ஔவை பிராட்டியார் அதியமான நெடுமானஞ்சியிடமிருந்து ஒப்பற்ற நெல்லிக்கனியைப் பெற்றுச் சிறு இலை நெல்லித்தீங்கனி குறியாது ஆதல் நின்கைத் தக்கிச்சாதல் நீங்க எமக்கீந்தனையே" என்று மனமார அவனை வாழ்த்தியபோது மேனாட்டினர் இன்று கண்டுபிடிக்கும் உண்மையை அன்றே உணர்ந்திருந்தனர் போலும் எனக் குறிப்பிடுகின்றார். இதேபோல் தீட்டிய அரிசியின் தீமையையும் புழுங்கல் அரிசியின் நன்மையையும் கூறுகிறார்.

## சு.குழந்தைநாதன்

சு.குழந்தைநாதன் 1930 ஆம் ஆண்டு பிறந்தவர். பட்டப்படிப்பைக் காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் முதுகலைப் படிப்பைச் சென்னை பல்கலைக்கழகத்திலும் முடித்த இவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மாயூரம் வேதநாயகரின் மறுமலர்ச்சிப் பணிகள் பற்றி ஆய்வு மேற்கொண்டவர்.

"சுதந்திர தாகம்" என்ற பெயரில் மொழிமாற்றம் செய்துள்ளார். தாகூரின் சொற்பொழிவுகளைத்தொகுத்து "தாகூரின் சொற்பொழிவுகள்" என்ற பெயரில் 1973 ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டார்.

"ஆழ்நிலை தியானமும் ஆக்க அறிவியலும்" என்ற தலைப்பில் மகரிஷியின் தியான முறையை அழகிய தமிழில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு, நாடகம், பொருளாதாரம், அறிவியல், ஆன்மீகம், இலக்கியம், சமயம் போன்ற பல்துறை அறிஞரான சு.குழந்தைநாதன், தான் சார்ந்த கிறித்துவ சமயத்திற்கும் சிறந்து பணியாற்றியுள்ள பெருமைக்குரியவர் ஆவார்.

## நெஞ்சக நோய் மருத்துவர் பி.எம்.ரெக்ஸ்

இவர் தூத்துக்குடியை அடுத்த புன்னைக்காயலில் 1934 ஆம் ஆண்டு பிறந்தவர். ஆங்கில மருத்துவ நூல்களுக்கு இணையாக தமிழில் மருத்துவ நூல்களை எழுதிய மருத்துவர் ரெக்ஸ், சமயம், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளிலும் எழுதியும், பேசியும் சிறப்பாகப் பணியாற்றி 2005ஆம் ஆண்டு காலமானார்.

## முடிவுரை

தமிழுக்குத் தொண்டு செய்தவர்களுள் ஐரோப்பியர்களைப் பற்றி மட்டுமே நாம் அதிகமாக ஆய்வு செய்து வருகின்றோம். ஆனால் தமிழகத்தில் தோன்றிய பலரும் தமிழுக்குத் தொண்டு ஆற்றியுள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.